அடங்கிய திரைப்படங்களை, ''நல்லதம்பி'' போன்ற திரைப் படங்களை, மாதத்திற்கு ஒரு முறையாவது, சிறைச்சாலையிலே போட்டுக் காட்ட அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

திரு. ஐசரி வேலன் (அமைச்சரின் பேரவைச் செயலர்): பேரவைத் தலைவரவர்களே, அரசு கட்டிடங்களுக்கும் கோயில் களுக்கும் நீர்ப் பாசனத் திட்டங்கள், அணைகள், சிறைச்சாலை கள் முதலியவற்றில் படம் பிடிப்பதற்கு நாள் ஒன்றுக்கு ரூ. 250 வசூலிக்கப்படுகிறது. அவைகளுக்கு வைப்புத் தொகை யாக ரூ. 1,000 வசூலிக்கப்படுகிறது. மீன் பிடிப்புத்துறை, காடுகள் இவைகளில் படம் எடுப்பதற்கு நாள் ஒன்றுக்கு ரூ. 100 வசூலிக்கப்படுகிறது. அவற்றிற்கு வைப்புத் தொகை யாக அதே ரூ. 1,000 வசூலிக்கப்படுகிறது. உதகமண்டலத் திலுள்ள பூங்காக்கள், கொடைக்கானலிலே உள்ள அரசைச் சேர்ந்த பூங்காக்கள் இவைகளில் நாள் ஒன்றுக்கு ரூ. 500 வசூலிக்கப்படுகிறது. வைப்புத் தொகையாக ரூ. 2,000 வசூ லிக்கப்படுகிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்ட கடைசிக் கேள்வியை, நிச்சயமாக இந்த அரசு பரிசீலனை செய்யும்.

சிறைத்துறையிலுள்ள நன்னடத்தைப் பிரிவு அலுவலர்கள்.

*வினா எண். 128—திரு. செ. மெ. ராஜு: மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா:

(அ) நன்னடத்தைப் பிரிவு அலுவலர்களை சிறைத் துறை யிலிருந்து தனியாகப் பிரிக்கும் திட்டம் ஏதேனும் அரசின் பரி சீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது பிரிக்கும் உத்தேசம்?

திரு. எம். ஏ. ஜெயவேலு (அமைச்சரின் பேரவைச் செயலர்): தலைவரவர்களே, தமிழ்நாடு சிறை சீர்திருத்தக் குழு இதுபற்றி பரிந்துரை செய்திருக்கிறது. அது அரசினுடைய ஆய்விலே இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. கூத்தகுடி ச. சண்முகம்: தலைவரவர்களே, கடந்த சட்டமன்றக் கூட்டத்திலே, சட்ட அமைச்சர் சொல்கின்ற போது, தனியாகப் பிரிப்பதற்கான அவசியத்தை இந்த அரசு உணர்ந்திருக்கிறது, அதற்காகப் பரிசீலனை செய்யும் என்று சொன்னார்கள், ஆகவே, அந்தத் துறையிலே பரிசீலனை செய் கிறார்களா? அல்லது பொதுவான பரிசீலனையில் உள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.

1980 பிப்ரவரி 13]

திரு. எம். ஏ. ஜெயவேலு (அமைச்சரின் பேரவைச் செயலர்) : சிறைச் சீர்திருத்தக் குழு பரிந்துரை செய்திருக்கிறது. அதை இந்த அரசு ஆய்வு செய்து உயர்நீதிமன்றத்தைக் கேட்டது. உயர்நீதிமன்றமும் ஒப்புதல் கொடுத்திருக்கிறது. அது இப்பொழுது அரசின் பாசீலனையில் இருக்கிறது.

[முற்பகல் 9-20]

திரு. சென்னை மு. அரங்கநாதன் : பேரவைத் தலைவர் அவர்களே. இந்தச் சிறை சீர்திருத்தக் குழு எப்போது அமைக்கப் பட்டது ? அந்தக் குழுவிலே யார் யார் உறுப்பினர்களாக இருக்கிறார்கள் ? அவர்களுடைய பரிந்துரை என்ன ?

திரு. எம். ஏ. ஜெயவேலு (அமைச்சரின் பேரவைச் செயலர்) : அந்தப் பரிந்துரைகள் அடங்கிய ஒரு விவர அறிக்கை இந்த மன்றத்திலே வைக்கப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. சென்னை மு. அரங்கநாதன் : தலைவர் அவர்களே, குழு எப்போது அமைக்கப்பட்டது? யார் யார் அங்கம் வகிக்கிறார்கள்?

திரு. ரா. உமாநாத் : 2, 3 வால்யூம்கள் கொண்ட ஒரு பெரிய அறிக்கையை டிஸ்டிரிபுட் பண்ணினார்கள்.

திரு. எம். ஏ. ஜெயவேலு (அமைச்சரின் பேரவைச் செயலர்) : பிரிசன் ரிபார்ம்ஸ் கமிஷன் என்று அதற்கு ஆங்கிலத்திலே பெயர். ஓய்வு பெற்ற நீதிபதி திரு. நரசிம்மன், ஐ.சி.எஸ். அவர்கள் தலைமையிலே அந்தக் குழு அமைக்கப்பட்டு, அவர்களாலே ஒரு விரிவான அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டு, அது இந்த மன்றத்திலே வைக்கப்பட்டிருக்கிறது.

திரு. சென்னை மு. அரங்கநாதன் : தலைவர் அவர்களே? அந்தக் குழுவிலே சிறையில் அடைக்கப்பட்டு துன்புறுத்தப்பட்ட அரசியல்வாதிகள் யாராவது அங்கம் வகிக்கிறார்களா என்ற நோக்கத்தின் அடிப்படையிலேதான் இந்தக் கேள்வியைக் கேட்டேன். அப்படி யாராவது இருக்கிறார்களா ?

திரு. எம். ஏ. ஜெயவேலு (அமைச்சரின் பேரவைச் செயலர்) : தலைவர் அவர்களே, யார் யார் உறுப்பினர்கள் என்பது அந்த அறிக்கையிலே இருக்கிறது. அரசியல் கட்சிகளைச் சார்ந்தவர்கள் யாரும் இல்லை.